# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 57/மா/2026
நாள் 18.06.2026

சு. கந்தசாமி,
சிவகாசி. முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
சிவகாசி மாநகராட்சி. எதிர் மனுதாரர்

சிவகாசி மேற்கு, கந்தபுரம் காலனி, காமராஜர் சாலை, கதவு எண் 296/5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. சு. கந்தசாமி என்பவரின் 30.01.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.02.2026 அன்று பெறப்பட்டு 57/மா/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சிவகாசி மேற்கு, கந்தபுரம் காலனி, காமராஜர் சாலை, கதவு எண் 296/5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. சு. கந்தசாமி என்பவர் 30.01.2026 நாளிட்ட மனுவுடன் இணைத்தனுப்பியுள்ள சிவகாசி மாநகராட்சி ஆணையருக்கு முகவரியிட்ட 28.12.2024 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“1. மேல் விலாசத்தில் கண்ட (1) S. கந்தசாமி, (2) S. அய்யப்பன், (3) S. கிரகராஜ் மற்றும் (4) S. மணிவேல் ஆகிய நான்கு பேரும் உடன் பிறந்த சகோதரர்கள். எங்களில் மூத்தவர் கந்தசாமி என்பவரது பெயரில் தான் எங்களது தகப்பனார் ஆதியில் கந்தபுரம் காலனி என்ற பெயரில் இந்த காலனியை உருவாக்கியுள்ளார். எங்களது தந்தை திரு. சுப்பையா நாடார் காலத்திலேயே எங்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட இந்த இடத்தில் சுமார் 70 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருந்து வருகின்றோம்.

2. மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் சிவகாசி மாநகராட்சிக்கு நடந்த மன்ற உறுப்பினர் தேர்தலில், எங்களது 27வது வார்டிற்கு எங்களில் 4வதான மணி வேல் அவர்களது மனைவி திருமதி. தனலட்சுமி அவர்கள் போட்டியிட்டு தோல்வி அடைந்தார். திருமதி பாக்கியலட்சுமி வெற்றி அடைந்தார்.

3. அவர் வெற்றி அடைந்ததில் இருந்து எங்கள் மீதும், எங்களுக்கு ஒட்டு போட்ட மற்றவர்கள் மீதும் மிகுந்த காழ்ப்புணர்ச்சியுடன் இருந்தார்.

4. கடந்த 28.12.2024 தினம் சனிக்கிழமையன்று காலை 10 மணி அளவில், திருமதி. பாக்கியலட்சுமியும் அவரது கணவர் திரு. மாணிக்கவேலும் பூமியில் வேலி கல் ஊன்றுவதற்கு துளை போடும் ஆக்கர் மிஷின் டிராக்டரோடும், 6 அடி உயர கல் தூண்கள்

60 எண்ணம் மற்றும் அதற்குரிய முள்கம்பி வேலி ரோல்கள் சுமார் நான்கு மற்றும் வேலை ஆட்கள் ஆறு, ஏழு நபர்களுடன் வந்தனர்.

5. கேட்டதற்கு எங்கள் வீட்டிற்கும், பக்கத்தில் உள்ள சக்தி மேச் பேக்டரிக்கும் வடக்கே நகராட்சி பூங்கா இடத்தில் கல் ஊன்றி, முள் வேலி போட வந்துள்ளதாக சொன்னார்கள். அவ்வாறு வேலி போட்டால், எங்களது வீட்டிலிருந்து மெயின் ரோட்டிற்கும் நாங்கள் 50 வருடமாக புழங்கி வரும், பாதை அடைபட்டு நாங்கள் மெயின் ரோட்டிற்கு வருவதற்கு சிரமப்படுவோம் என கூறியதற்கு, மாநகராட்சி தான் வேலி அமைக்க சொல்லியுள்ளனர் என கூறி வேலை ஆட்களை குழி தோண்டி கற்களை ஊன்ற சொல்லி, அவர்களும் ஆக்கர் மிஷினை வைத்து குழி தோண்டி கற்களை ஊன்றும் பணியில் ஈடுபட்டனர். மாநகராட்சி பணியாளர்கள் யாரும் உடன் வரவில்லை.

6. நாங்கள் செய்வது அறியாது திகைத்து நின்ற நிலையில், எங்களில் ஒருவர் சிவகாசியில் 1996 முதல் 2006 முதல் சேர்மனாகவும், தற்சமயம் 40வது வார்டு கவுன்சிலராகவும், வார்டு தலைவராகவும் பொறுப்பு வகிக்கும், மூத்த உறுப்பினர் திரு. A. ஞானசேகரன் அவர்களை அழைத்தனர். அன்று சனிக்கிழமை, விடுமுறை நாள் ஆனதால் தனது பேரக் குழந்தைகளோடு பொழுதைக் கழித்து கொண்டிருந்த அவர், தனது பேரக் குழந்தைகளோடு சம்பவ இடத்திற்கு வந்து திருமதி. பாக்கியலட்சுமியிடம் கற்களை ஊன்றுவதற்கு மாநகராட்சி ஆணையாளர் வழங்கிய பணியாணை ஏதும் உள்ளதா என கேட்டார். பணி ஆணை வந்து கொண்டிருக்கிறது என கூறினார்.

7. இதற்குள் எங்களில் சிலர் வந்திருந்த பணியாளர்களிடம் விசாரித்தவகையில், மாநகராட்சி பணி ஆணை எதுவும் கொடுக்கவில்லை எனவும், திருமதி. பாக்கியலட்சுமியும் அவரது கணவரும் தான் தங்களது சொந்த செலவில் ரூ.65,000/– என பேசி இந்த வேலையை செய்ய ரூ.30,000/– அட்வான்ஸ் கொடுத்து காண்ட்ராக்டரை கூட்டிவந்ததாக அறிந்து கொண்டோம்.

8. பொதுமக்கள் நிறைய பேர் கூடிவிட்டனர். ஒரு மூத்த உறுப்பினர் கூறியும் கேட்காமல், வேலையாட்களை தொடர்ந்து வேலை செய்ய சொன்னதால் நாங்கள் அனைவரும் வேலையை நிறுத்தச் சொன்னோம். மாநகராட்சி பணி ஆணை இல்லாமல் வேலை செய்யக்கூடாது என பிரச்சனை செய்தோம்.

9. திரு. ஞானசேகரன் அவர்களும் ஒரு மன்ற உறுப்பினருக்கு என தனியாக மாநகராட்சி பணிகள் செய்ய அதிகாரம் கிடையாது. வேலி போடும் பணி சம்பந்தமாகவோ, பூங்கா அமைக்கும் பணி சம்பந்தமாகவோ, பொது மக்களிடமிருந்து எந்தவிதமான புகாரோ, மாநகராட்சி ஆணையரிடமிருந்தோ பணி ஆணையோ இன்றி தனியாக மன்ற உறுப்பினர் பொது மக்கள் பலரையும் பாதிக்கும் பணியினை செய்ய அதிகாரம் இல்லை. மேற்படி செயல் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்பட்டு அதற்கு மாநகராட்சி ஆணையர் தான் பதில் சொல்ல வேண்டி வரும். அதனால் கல் ஊன்றுவதை நிறுத்தச் சொல்லுங்கள் என இருவரிடமும் பொறுமையாக கூறியதை காதில் வாங்கிக் கொள்ளாமல் கணவர், மனைவி இருவரும் வேலையைத் தொடர்ந்து நடத்தினர்.

10. அதற்கிடையில் மாநகராட்சி பில்டிங் செக்ஷன் பணியாளர் ஒருவர் இடத்திற்கு வந்தார். அவரும் பணி ஆணை எதுவும் கொண்டு வரவில்லை. எனவே, எங்களில் மூத்தவரான திரு. கந்தசாமி அவர்கள் மற்றும் அனைவரும் பணி ஆணையில்லாமல் வேலை செய்யக் கூடாது என பிரச்சினை செய்தோம்.

11. திரு. ஞானசேகரன் அவர்களும், மன்ற உறுப்பினர் ஒருவரது பணி என்பது, பொதுமக்களுக்கு பிரச்சினை ஏதாவது இருந்தால் அதனை மாநகராட்சி அதிகாரிகளிடம் முறையிட்டு அதனை சரி செய்வது தானே ஒழிய மன்ற உறுப்பினர் ஒருவரே அவரது

கணவரோடு சேர்ந்து கொண்டு ரூ.65,000/– கைபொறுப்பில் இருந்து செலவழித்து, பொதுமக்களுக்கு புதிதாக பிரச்சனை உண்டு பண்ணி, சட்டம் ஒழுங்கு பிரச்சனையை ஏற்படுத்துவது அல்ல என தனது அனுபவத்தின் காரணமாக அறிவுறுத்தினார்.

12. இதற்கிடையில் எங்களில் நான்காவது நபரான திரு. மணிவேல், திருமதி பாக்கியலட்சுமியிடம், அவர்கள் மட்டும் அருகில் உள்ள அவர்களது வீட்டில் பத்து அடி இழுத்து கட்டியிருப்பதாகவும், அருகில் உள்ள பணி முடியாத பூங்காவில் சுமார் 3 அடி ஒருவர் இழுத்து வீடு கட்டியிருப்பது மற்றும் அருகில் உள்ள மற்றொரு பூங்கா இடத்தில் ஒருவன் ஷெட் போட்டிருப்பது இதெல்லாம் உங்களுக்கு தெரியவில்லையா, என கேள்வி கேட்டார். கூட்டத்தில் மற்றொருவர் அங்கெல்லாம் காசு வாங்கி விட்டீர்களா? என கேட்டதற்கு, திருமதி.பாக்கியலட்சுமியின் கணவர் தகாத கெட்ட வார்த்தையில் ஆவேசமாகவும், ஆக்ரோஷமாகவும், 30,000 ரூபாய் அட்வான்ஸ் கொடுத்து கூட்டி வந்த வேலை ஆட்களை வேலை செய்யவிட மாட்டேன் என்ற ஆதங்கத்திலும், கோபத்திலும் பேசினார்.

13. மறுபடியும் திரு. ஞானசேகரனும், திருமதி.பாக்கியலட்சுமியிடம் மன்ற உறுப்பினரான தாங்களே பணி ஆணை இல்லாமல், மாநகராட்சி அதிகாரிகள் இல்லாமல் மாநகராட்சி இடத்தில் உங்களது கணவரையும் கூட்டிக் கொண்டு வந்து வேலை செய்வது முறையான செயல் அல்ல. மேலும் உங்களது கணவரது பேச்சு சட்டம் ஒழுங்கு பிரச்சனைக்கு வழிவகுக்கும் என பொறுமையாக சொன்ன பிறகு, தனது கணவரை வீட்டிற்கு போகும்படி சொல்லிவிட்டார்.

14. பொது மக்களும் வேலையை நிறுத்த சொல்லி சத்தம் போட்டவுடன், வேலை ஆட்களை வேலையை நிறுத்தச் சொல்லி, தான் போலீஸ் ஸ்டேஷன் போய் எங்கள் அனைவர் மீதும் புகார் கொடுக்கப் போவதாக சொல்லி, அது வரை வேலையை நிறுத்தச் சொல்லி சென்றார்.

15. பின்னர், மதியம் சுமார் இரண்டு மணி அளவில், சிவகாசி நகர் காவல் நிலையத்திலிருந்து போலீசார் வந்து அனைத்தையும் விசாரித்து வேலையை நிறுத்தச் சொல்லி, ஊன்றிய கல்லை குழியிலிருந்து எடுக்க உத்தரவிட்டு, கற்களை எடுத்துப் போக சொல்லி உத்திரவிட்டனர்.

16. ஆனால் வேலையாட்கள் கற்களை மட்டும் குழியிலிருந்து எடுத்து விட்டு, கற்கள் மற்றும் வேலியினை அங்கேயே விட்டுச் சென்று விட்டார்கள். திருமதி. பாக்கியலட்சுமியோ இன்னும் இரண்டு நாட்களில் பணி ஆணை பெற்று வேலையினை செய்வேன் என வெறி பிடித்தவர் போல் பேசிவிட்டு, இரவு 9 மணி அதே இடத்தில் நின்று, யார் யாரிடமோ போன் மூலம் பேசிக் கொண்டிருந்தார்.

இதுசம்பந்தமாக தாங்கள் விசாரணைக்கு அழைக்கும் பட்சத்தில், தங்கள் விசாரணைக்கு ஒத்துழைக்கிறோம் என உறுதி கூறுகிறோம்.

திருமதி. பாக்கியலட்சுமி அவர்கள் சிவகாசி தி.மு.க. கட்சியின் மாநகராட்சி துணைச் செயலாளர் என்று அறியப்படுகிறார்.''

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 20.03.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் சிவகாசி மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. சிவகாசி மாநகராட்சி ஆணையாளர் தனது 24.04.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

''தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், சென்னை அவர்களின் முறையீட்டு மனுவில் இணைத்து வரப்பெற்றுள்ள திரு. கந்தசாமி, சிவகாசி அவர்களின்

கடிதத்தில் நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் மனுவில் குறிப்பிட்டுள்ள பூங்கா இடம் பராமரித்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டதால் மேற்படி பொருள் தொடர்பாக நடவடிக்கைகள் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது. சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண் W.P. (MD) No.2746/2025–ன் 03.02.2025ம் தேதிய உத்தரவில் மேற்கண்ட இடத்தின் உரிமையாளர் அவர்களின் விருப்பத்தின் பேரில் பயன்படுத்தி கொள்ள தெரிவிக்கப்பட்டது. சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண் W.A. (MD) No.407/2025–ன் 11.08.2025ம் தேதிய உத்தரவில் பூங்கா இடத்தை பூங்காவாகவே பராமரிக்க தெரிவிக்கப்பட்டது. சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண் W.P. (MD) No.19490/2025–ன் 11.08.2025ம் தேதிய உத்தரவில் மேற்கண்ட பூங்கா இடத்தில் ஏதேனும் ஆக்கிரமிப்பு இருந்தால் அதனை அகற்றம் செய்து பூங்கா இடத்தை பூங்காவாகவே பராமரிக்க தெரிவிக்கப்பட்டது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள திரு. தேன்ராஜன் வகையறா இடம் சர்வே எண் 74/1A–ன் இடத்தின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள தனியார் நிலம் 1. வி. சுசீலாதேவி 2. வி. அரசு மற்றும் 3. வி. புருஷோத்தமன் ஆகியோர்களுக்கு சொந்தமான நிலமாகும். மேற்படியார்களால் மேற்படி இடம் சிவகாசி கிராமம் சர்வே எண்கள் 39/9 மற்றும் 39/11 இடத்தினை குடியிருப்பு மனைகளாக பிரித்து நகர் ஊரமைப்புத் துறையில் அனுமதி பெற்றுள்ள மனைப்பிரிவு இடத்தில் அமையும் பூங்கா இடமாகும். மேற்கண்ட அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு அனுமதி எண் ம.வ./ந.ஊ.இ. எண் 835/95–ன் பூங்கா இடத்தினை சிவகாசி நகராட்சிக்கு ஒப்படை செய்ததின் அடிப்படையில் வருவாய்த் துறை நில அளவை ஆவணங்களில் ''சிவகாசி நகராட்சி ஆணையாளர்'' என பட்டா ஏற்பட்டுள்ள பூங்கா இடமாகும். மேற்படி பூங்கா இடம் நகராட்சியின் கட்டுப்பாட்டில் இருந்த நிலையில் பூங்கா இடத்தினை பாதுகாத்திட கல் ஊன்றி முள்வேலி அமைக்கப்பட்டது.

இந்நிலையில் திரு. ஜெ. தேன்ராஜன் மற்றும் திருமதி ராஜா உஷாராணி ஆகியோரால் மாநகராட்சியை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கு எண் W.P. (MD) No.22342/2025–ன் 13.08.2025ம் தேதிய உத்தரவை எதிர்த்து சிவகாசி மாநகராட்சியால் தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கு எண் W.A. (MD) No.2838/2025–ன் 13.10.2025ம் தேதிய நீதிமன்ற உத்தரவில் பூங்கா இடத்தினை பூங்காவாகவே பராமரிக்கப்பட வேண்டும் எனவும், வடக்குப் பகுதி தளர்வு உரிமைகள் பிரச்சனையை முடிவெடுப்பதில் சிவில் நீதிமன்றம் முதன்மையானது என்ற நிலைப்பாட்டின்படி தனியரால் சிவகாசி கீழமை நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கினை (வழக்கு எண் O.S. No.109/2025 மற்றும் I.A. No.01/2025) 25.09.2025 அன்று விசாரித்து வழக்கு வாதங்களுக்காக பட்டியலிடப்பட்டு 09.10.2025 அன்று அல்லது அதற்கு முன் உத்தரவுகளை பிறப்பிக்கவும் அவ்வுத்தரவின் நகல்கள் 13.10.2025 அன்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என தெரிவித்து உத்தரவிடப்பட்டது.

அதனை தொடர்ந்து கீழமை நீதிமன்றத்தில் மேற்படியாரின் தற்காலிக உறுத்துக்கட்டளை கோரியதனை மறுத்து 10.10.2025–ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதை தொடர்ந்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் மேல்முறையீட்டு வழக்கு எண் W.A. (MD) No.2838/2025–ன் 13.10.2025ம் தேதிய உத்தரவில் தெரிவிக்கப்பட்டவாறு பூங்கா இடத்தினை மாநகராட்சி மூலம் கல் ஊன்றி பாதுகாப்பாக பூங்காவாகவே பராமரிக்கப்பட்டு வருகிறது. மியாவாக்கி அடர்வனம் ஏதும் செயல்படுத்தப்படவில்லை என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 02.06.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 05.05.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. இந்நிலையில், சிவகாசி மாநகராட்சி ஆணையாளர் தனது 01.06.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:-

"சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண் W.P. (MD) No. 2746/2025-ன் 03.02.2025ம் தேதிய உத்தரவில் மேற்கண்ட பூங்கா இடத்தை பொறுத்து பூங்கா அபிவிருத்தி செய்து பயன்படுத்தி கொள்ள தெரிவிக்கப்பட்டது. சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண் W.A. (MD) No.407/2025-ன் 11.08.2025ம் தேதிய உத்தரவில் பூங்கா இடத்தின் ஆவணங்கள் அடிப்படையில் பூங்கா இடம் என்பதால் பொதுப்பயன்பாட்டுக்கானது ஆகும். எனவே, பூங்காவாகவே பராமரிக்க தெரிவிக்கப்பட்டது.

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண் W.P. (MD) No. 19490/2025-ன் 11.08.2025ம் தேதிய உத்தரவில் மேற்கண்ட பூங்கா இடத்தில் ஏதேனும் ஆக்கிரமிப்பு இருந்தால் அதனை அகற்றம் செய்து பூங்கா இடத்தை அப்பகுதி மக்கள் பயன்படுத்தும் வகையில் பூங்காவாகவே பராமரிக்க தெரிவிக்கப்பட்டது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடம் திரு. தேன்ராஜன் வகையறாவிற்கு சொந்தமான சர்வே எண் 74/1A-ன் இடத்தின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள தனியார் நிலம் 1. வி. சுசீலாதேவி 2. வி. அரசு மற்றும் 3. வி. புருசோத்தமன் ஆகியோர்களுக்கு சொந்தமான நிலமாகும். மேற்படியார்களால் மேற்படி இடம் சிவகாசி கிராமம் சர்வே எண்கள் 39/9 மற்றும் 39/11 இடத்தினை குடியிருப்பு மனைகளாக பிரித்து நகர் ஊரமைப்புத் துறையில் அனுமதி பெற்றுள்ள மனைப்பிரிவு இடத்தில் அமையும் பூங்கா இடமாகும். மேற்கண்ட அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு அனுமதி எண் ம.வ./ந.ஊ.இ. எண் 835/95-ன் பூங்கா இடத்தினை சிவகாசி நகராட்சிக்கு ஒப்படை செய்ததின் அடிப்படையில் வருவாய்த் துறை நில அளவை ஆவணங்களில் "சிவகாசி நகராட்சி ஆணையாளர்" என பட்டா ஏற்பட்டுள்ள பூங்கா இடமாகும். மேற்படி பூங்கா இடம் நகராட்சியின் கட்டுப்பாட்டில் இருந்த நிலையில் பூங்கா இடத்தினை பாதுகாத்து பராமரித்திட கல் ஊன்றி முள்வேலி அமைக்கப்பட்டது.

இந்நிலையில் திருமதி ராஜா உஷாராணி என்பவரால் மாநகராட்சியை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கு எண் W.P. (MD) No.22342/2025-ன் 13.08.2025ம் தேதிய உத்தரவில் மனுதாரரின் இடம் 74/1A-க்கு பிரதிவாதி தரப்பில் சொல்லப்பட்ட 74/1A-ன் தென்பகுதியில் கிழமேல் பாதை உள்ளதை 6 மாத காலத்திற்குள் ஆய்வு செய்து உறுதி செய்யவும், 4 வார காலத்திற்கு "Status Quo" தொடரவும் உத்தரவிடப்பட்டுள்ளது. சிவகாசி மாநகராட்சியால் தொடரப்பட்ட மேல்முறையீடு வழக்கு எண் W.P. (MD) No.2838/2025-ன் 24.09.2025ம் தேதிய நீதிமன்ற உத்தரவில் வடக்குப் பகுதி தளர்வு உரிமைகள் பிரச்சனையை முடிவெடுப்பதில் சிவில் நீதிமன்றம் முதன்மையானது என்ற நிலைப்பாட்டின் படி தனியரால் சிவகாசி கீழமை நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கினை (வழக்கு எண் O.S. No.109/2025 மற்றும் I.A. No.01/2025) 25.09.2025 அன்று விசாரித்து வழக்கு வாதங்களுக்காக பட்டியலிடப்பட்டு 09.10.2025 அன்று அல்லது அதற்கு முன் உத்தரவுகளை பிறப்பிக்கவும் அவ்வுத்தரவின் நகல்கள் 13.10.2025 அன்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என தெரிவித்து உத்தரவிடப்பட்டது.

அதனை தொடர்ந்து சிவகாசி சார்பு நீதிமன்ற வழக்கு எண் O.S. No.109/2025 in I.A. No.01/2025)–ன் உத்தரவு நாள் 10.10.2025–ம் உத்தரவில் மனுதாரர் கோரியிருந்த இடைகால தடை ஏதும் வழங்கப்படாமல் வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டது.

வழக்கு எண் W.A. (MD) No.2838/2025–ன் 13.10.2025ம் தேதிய உத்தரவில் மனுதாரர் கோரியிருந்த இடைகால தடை வழங்கப்படாமல் வழக்கு தள்ளுபடி செய்தும், உரிய சட்ட ஆலோசனை பெற்று பரிகாரத்தை தேடிக்கொள்ள முதல் பிரதிவாதி/வழக்கின் வாதிக்கு வாய்ப்பினை வழங்குகிறோம் என உத்தரவிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பூங்கா இடத்தினை மாநகராட்சி மூலம் கல் ஊன்றி பாதுகாப்பாக பூங்காவாகவே பராமரிக்கப்பட்டு வருகிறது. மியாவாக்கி அடர்வனம் ஏதும் செயல்படுத்தப்படவில்லை என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

6. மனுதாரர், திரு. சு. கந்தசாமி மற்றும் திரு. S.M. பரஞ்சோதி பாண்டியன் ஆகியோர் 02.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

''சிவகாசி மேற்கு கந்தபுரம் காலனி எனது தந்தை திரு.சுப்பையா நாடார் காலத்திற்கு முன்பே எங்களுக்கு பூர்வீகமான பாத்தியப்பட்ட இடமாகும். இந்த இடத்தில் கடந்த 70 வருடங்களாக வசித்து வருகிறோம். இந்நிலையில் சிவகாசி மாநகராட்சியால் பூங்கா அமைப்பதற்காக எங்கள் வீட்டின் எதிர்புரத்தில் உள்ள எங்களுக்கு சொந்தமான பட்டா இடமான 3 அடி நிலத்தினை எவ்வித அளவீடும் செய்யாமல் ஆக்கிரமித்து கல் ஊன்றி பணிகளை மேற்கொண்டுள்ளனர். இது குறித்து மாவட்ட ஆட்சியர், மாநகராட்சி ஆணையர் ஆகியோருக்கு புகார் அளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, சிவகாசி மாநகராட்சியால் எங்கள் வீட்டிற்கு எதிரே பூங்கா அமைந்துள்ள நிலத்தினை வருவாய் துறையின் மூலம் எங்கள் முன்னிலையில் அளவீடு செய்து எங்களுக்கு சொந்தமான 3 அடி நிலத்தை மீட்டு தருமாறு சிவகாசி மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.''

6. எதிர்மனுதாரர் தரப்பில் சிவகாசி மாநகராட்சி உதவி மாநகர திட்டமிடுநர் மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோர் 02.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

''மனுதாரர் குறிப்பிட்டுள்ள திரு. தேன்ராஜன் வகையறா இடம் சர்வே எண் 74/1 A–ன் இடத்தின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள தனியார் நிலம் 1. வி. சுசீலாதேவி 2. வி. அரசு மற்றும் 3. வி. புருஷோத்தமன் ஆகியோர்களுக்கு சொந்தமான நிலமாகும். மேற்படியார்களால் மேற்படி இடம் சிவகாசி கிராமம் சர்வே எண்கள் 39/9 மற்றும் 39/11 இடத்தினை குடியிருப்பு மனைகளாக பிரித்து நகர் ஊரமைப்புத் துறையில் அனுமதி பெற்றுள்ள மனைப்பிரிவு இடத்தில் அமையும் பூங்கா இடமாகும். மேற்கண்ட பூங்கா இடத்தினை சிவகாசி நகராட்சிக்கு ஒப்படை செய்ததின் அடிப்படையில் வருவாய்த் துறை நில அளவை ஆவணங்களில் ''சிவகாசி நகராட்சி ஆணையாளர்'' என்ற பெயரில் பட்டா உள்ள பூங்கா இடமாகும். மேற்படி பூங்கா இடம் நகராட்சியின் கட்டுப்பாட்டில் இருந்த நிலையில் பூங்கா இடத்தினை பாதுகாத்திட கல் ஊன்றி முள்வேலி அமைக்கப்பட்டது.

தற்போது மனுதாரர் தனக்கு சொந்தமான பட்டா இடமான 3 அடி இடத்தினை ஆக்கிரமித்து சிவகாசி மாநகராட்சியால் பூங்கா அமைக்கப்பட்டுள்ளதாக புகார் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் தெரிவித்த புகார் தொடர்பாக வருவாய் துறை மூலம் மனுதாரரின் முன்னிலையில் பூங்கா அமைந்துள்ள இடத்தினை அளவீடு செய்து, அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கை சிவகாசி மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.''

7. மனுதாரரின் மனு, மனுதாரர் மற்றும் அவருடன் விசாரணைக்கு ஆஜரான திரு. S.M. பரஞ்சோதி பாண்டியன் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் சிவகாசி மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கைகள், உதவி நகர திட்டமிடுநர் மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

மனுதாரர் சிவகாசி மேற்கு கந்தபுரம் காலனி மனுதாரரின் தந்தை திரு.சுப்பையா நாடார் காலத்திற்கு முன்பே தங்களுக்கு பூர்வீகமான பாத்தியப்பட்ட இடத்தில் கடந்த 70 வருடங்களாக வசித்து வருகிறார் என்பதும், சிவகாசி மாநகராட்சியால் பூங்கா அமைப்பதற்காக தங்கள் வீட்டின் எதிர்புறத்தில் தங்களுக்கு சொந்தமான பட்டா இடமான 3 அடி நிலத்தினை எவ்வித அளவீடும் செய்யாமல் ஆக்கிரமித்து கல் ஊன்றி பணிகளை மேற்கொள்ளப்பட்டது என்பதும், இது குறித்து மாவட்ட ஆட்சியர், மாநகராட்சி ஆணையர் ஆகியோருக்கு புகார் அளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதால், சிவகாசி மாநகராட்சியால் தங்கள் வீட்டிற்கு எதிரே உள்ள பூங்கா அமைந்துள்ள நிலத்தினை வருவாய் துறையின் மூலம் தங்கள் முன்னிலையில் அளவீடு செய்து தங்களுக்கு சொந்தமான 3 அடி நிலத்தை மீட்டு தருமாறு சிவகாசி மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் மனுதாரர் மற்றும் மனுதாரருடன் ஆஜரான திரு. S.M. பரஞ்சோதி பாண்டியன் ஆகியோரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள திரு. தேன்ராஜன் வகையறா இடம் சிவகாசி கிராமம் சர்வே எண் 74/1 A–ன் இடத்தின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள தனியார் நிலம் 1. வி. சுசீலாதேவி 2. வி. அரசு மற்றும் 3. வி. புருஷோத்தமன் ஆகியோர்களுக்கு சொந்தமான நிலத்தில், சர்வே எண்கள் 39/9 மற்றும் 39/11 இடத்தினை குடியிருப்பு மனைகளாக பிரித்து நகர் ஊரமைப்புத் துறையில் அனுமதி பெற்றுள்ள மனைப்பிரிவு இடத்தில் அமையும் பூங்கா இடத்தினை சிவகாசி நகராட்சிக்கு ஒப்படை செய்ததின் அடிப்படையில் வருவாய்த் துறை நில அளவை ஆவணங்களில் ''சிவகாசி நகராட்சி ஆணையாளர்'' என்ற பெயரில் பட்டா உள்ள பூங்கா இடமாகும் என்பதும், மேற்படி பூங்கா இடம் நகராட்சியின் கட்டுப்பாட்டில் இருந்த நிலையில் பூங்கா இடத்தினை பாதுகாத்திட கல் ஊன்றி முள்வேலி அமைக்கப்பட்டது என்பதும், தற்போது மனுதாரர் தனக்கு சொந்தமான பட்டா இடமான 3 அடி இடத்தினை ஆக்கிரமித்து சிவகாசி மாநகராட்சியால் பூங்கா அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த புகார் தொடர்பாக வருவாய் துறை மூலம் மனுதாரரின் முன்னிலையில் பூங்கா அமைந்துள்ள இடத்தினை அளவீடு செய்து, அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கை சிவகாசி மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் சிவகாசி மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கைகள், உதவி நகர திட்டமிடுநர் மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள திரு. தேன்ராஜன் வகையறா இடம் சிவகாசி கிராமம் சர்வே எண் 74/1 A–ன் இடத்தின் வடக்குப் பகுதியில் 1. வி. சுசீலாதேவி 2. வி. அரசு மற்றும் 3. வி. புருஷோத்தமன் ஆகியோர்களுக்கு சொந்தமான தனியார் நிலத்தில், சர்வே எண்கள் 39/9 மற்றும் 39/11 இடத்தினை குடியிருப்பு மனைகளாக பிரிக்கப்பட்ட இடத்தில் உள்ள பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட இடமான சிவகாசி மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட நிலத்தில் மனுதாரருக்கு சொந்தமான 3 அடி இடத்தினை ஆக்கிரமித்து சிவகாசி மாநகராட்சியால் பூங்கா

அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த புகார் தொடர்பாக வருவாய் துறை மூலம் மனுதாரரின் முன்னிலையில் பூங்கா அமைந்துள்ள இடத்தினை அளவீடு செய்து, அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கை சிவகாசி மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் என சிவகாசி மாநகராட்சி உதவி நகர திட்டமிடுநர் மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, மனுதாரர் புகார் தொடர்பாக சிவகாசி, வருவாய் துறை மூலம் மனுதாரரின் முன்னிலையில் பூங்கா அமைந்துள்ள இடத்தினை அளவீடு செய்து அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சிவகாசி மாநகராட்சி ஆணையாளருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 18–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. சு. கந்தசாமி,
கதவு எண் 296/5, காமராஜர் சாலை,
கந்தபுரம் காலனி,
சிவகாசி மேற்கு–626 124.
விருதுநகர் மாவட்டம்.

(2) ஆணையாளர்,
சிவகாசி மாநகராட்சி,
சிவகாசி.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ / உதிரிகள்.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

செயலாளர்.